# மேற்கத்தேய நவீனத்துவத்திற்கான இஸ்லாமிய எதிர்வினைகள்: ஒரு விமர்சன ஆய்வு

பி. எம். ஜமாஹிர்
எம். ஐ. எம். தௌபீக்

## ஆய்வுச் சுருக்கம்

இவ் ஆய்வுக் கட்டுரையானது இஸ்லாமிய சிந்தனையில் மேற்கத்தேய நவீனத்துவத்தின் செல்வாக்கினைக் கண்டறிய முயன்றுள்ளதோடு நவீனத்துவத்திற்கான இஸ்லாமிய பதிலிறுப்புக்களையும் ஆராய்கின்றது. நவீனத்துவமானது மரபுவாதம், கருத்தியல் மற்றும் கோட்பாட்டுவாதம் ஆகியவற்றைச் சவாலுக்குட்படுத்துகின்றது. சந்தேகமின்றி நவீனத்துவம் இஸ்லாமிய உலகத்திலும் செல்வாக்கினையும் பல வினாக்களையும் தோற்றுவித்ததையும் காணமுடிகின்றது. அதிலும் குறிப்பாக, மேற்கத்தேய நவீனத்துவக் கருத்துக்களை எதிர்கொண்ட முஸ்லீம்கள் தங்களின் சமயத்தையும் சமய வாழ்க்கையையும் எவ்வாறு அணுகவேண்டும் என்ற விடயத்தில் மீள் சிந்தனைக்குட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வு மேற்கத்தேய நவீன கருத்தியல்களின் பிரதிபலிப்பாகக் காணப்படும் மூன்று சிந்தனைப் பள்ளிகள் மீது கவனம் செலுத்துகின்றது. முதலாவதாக, இஸ்லாமிய நவீனத்துவம் குறித்த வியாக்கியானமாகும். இது இஸ்லாத்தின் மதச் சார்பின்மை மற்றும் நவீனத்துவம் பற்றி எடுத்துக் காட்டுகின்றது. இரண்டாவது, மேற்கத்தேய நவீன கருத்தியல்களுக்கான பதிலாக இஸ்லாமிய புத்தாக்க முயற்சிகள் அல்லது இஸ்லாமிய அடிப்படை வாதம் பற்றியதாகும். இறுதியாக, நவீனத்துவத்திற்கான மரபுவாதிகளின் அணுகுமுறை பற்றியதாகும். இந்தச் சிந்தனைப் பள்ளிகள் இஸ்லாமிய உலகத்தை மட்டுமன்றி முழு உலக ஒழுங்கமைப்பையும் மாற்றியமைத்திருப்பதும் அறியத்தக்கதாகும். ஆக, நவீனத்துவத்திற்கான பதிலாக கருதப்படும் இம் மூன்று சிந்தனைப் பள்ளிகளைச் சார்ந்த சிந்தனையாளர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, நவீனத்துவம் மற்றும் அதற்கான இஸ்லாமிய எதிர்வினைகள், பிரதிபலிப்புக்கள், நவீனத்துவமும் இஸ்லாமும் ஒன்றுடன் ஒன்று பிணைந்துள்ள மற்றும் வேறுபடும் கூறுகள் பற்றிய விமர்சனப் பகுப்பாய்வை வெளிக் கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

*திறவுச் சொற்கள் :* நவீனத்துவம், மதச்சார்பின்மை, அடிப்படைவாதம் மற்றும் மரபுவாதம்

இந்த ஆய்வு பின்வரும் வினாக்களை அடிப்படையாகக் கொண்டது: மேற்கத்தேய நவீனத்துவ போக்குகளுடன் இஸ்லாம் சம இருப்புடையதா? இல்லையெனின் நவீனத்துவத்திற்கான இஸ்லாமிய சிந்தனையாளர்களின் பதில் மற்றும் எதிர் வினைகள் யாவை? இவ்வெதிர்வினைகள் பற்றியமேற்கத்தேய மெய்யியல் வாசிப்புகள் மற்றும் புரிந்துணர்வுகள்எவை? இது தொடர்பாக முஸ்லிம் மற்றும் மேற்கத்தேய மெய்யியலாளர்களுக் கிடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் யாவை? சமூக, அரசியல், கலாசார அடிப்படையில் நவீனத்துவத்தின் பாரிய விஞ்ஞான சிந்தனைகளின் அடிப் அடையாளமாக அறிவொளிக் காலம் மேற்கத்தேய மெய்யியலாளர் களினால் கருதப்படுகின்றது. இப்போக்கு சமூக மாற்றங்களுக்கான சிந்தனையை முன்னிலைப்படுத்தியதோடு, சமயம் மற்றும் பாரம்பரியங்களுக்கு மாற்றீடாக விஞ்ஞானத்தை முன்வைத்தது. மேலும் அதிகார மரபுவாதிகளினால் முன்வைக்கப்பட்ட, ஸ்தாபிக்கப்பட்ட உண்மை, அதிகாரம் மற்றும் கருத்தியல்களை விமர்சனத்துக்குள்ளாகியது. அதிலும் நவீன மனிதன் பகுத்தறிவினை கருவியாகக் கொண்டு சமூக மாற்றத்தினை வடிவமைத்தான்.

பல்தரப்பட்ட புரிதல்கள் மற்றும் விளக்கங்கள் காரணமாக நவீனத்துவம் என்ற எண்ணக்கருவுக்கு சகலராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைவிலக்கணம் என்பது கடினமேயாகும். என்றாலும் பின்வரும் வரைவிலக்கணங்கள் நவீனத்துவத்தின் முக்கிய அம்சங்களை முன்வைக்கின்றன: 1890 முதல் 1930 வரையான காலகட்டத்தை நவீனத்துவத்தின் கால கட்டமாக இலக்கிய ஆய்வாளர்கள் வரையறுக்கின்றார்கள். அதிலும் அறிவொளி காலத்தில் நெருக்கடிக்குள்ளான அறிவும் ரொமண்டிசிச யுகத்தின் புத்தாய்வை நாடும் ஆர்வமும் சேர்ந்ததே நவீனத்துவத்தின் பண்பாகும் (Suresh, *2004*). விஞ்ஞானம், உலகாயுதத்துறைகளில் ஏற்பட்ட அரசியல், சமூகம், நுண்ணறிவு, பொருளாதாரம், மற்றும் அழகியல் சார்ந்த மாற்றங்கள் அதிலும் குறிப்பாக பகுத்தறிவு, தனி மையவாதம் மற்றும் நம்பிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றமாகும் (Goanker, *1999*). 'அனைத்தையும் புதியதாக்குதல்' நவீனத்துவமாகும். அதன் முழுமுதல் அம்சம் சிந்தனை சார்ந்த சமூக முன்னேற்றப் போக்காகும். அத்தோடு நடைமுறை, பரிசோதனை, விஞ்ஞான அறிவு மற்றும் தொழிநுட்பம் ஆகியவற்றின் உதவியுடன் சூழலைச் சீரமைத்து மனித புத்தாக்கம் மற்றும் முன்னேற்ற சக்தியை உறுதிப்படுத்துவது (Berman, 1988, p. 16).

நவீனத்துவம் என்பது வர்த்தகம் தொடக்கம் மெய்யியல் வரை இருப்பின் சகல அம்சங்களையும் மீள்பரிசீலனைக்குட்படுத்த தூண்டியதுடன், மனித வர்க்கத்தின் முன்னேற்றத்தைப்பிற் படுத்தும் காரணிகளுக்கான மாற்றீடான வழிமுறையாகும். இந்தவகையில், நவீனத்துவம் உலகை மையப்படுத்திய போக்காகும் (Dale & James, *2004*). தெய்வீக வெளிப்பாட்டின் இடத்திற்கு உலக மைய அறிவொளிக் காலத்தின் பதிலீடாகும் (Lerner, *1958*).

நவீனத்துவம் என்பதன் அர்த்தம் மேற்கத்தேய மையப்படுத்தலாகும் (Eickelman, *2000*). காண்டின் நோக்கில் நவீனத்துவம் அர்த்தப்படுத்துவது குருட்டுத்தனமான பின்பற்றுதல் மற்றும்

கோட்பாட்டுவாதம் ஆகியவற்றை விட சிந்தனைப் பகுப்பாய்வை வலியுறுத்து கின்றது. இக்கருத்து இஸ்லாமிய சிந்தனைகளில் வலியுறுத்தப்படுவதை அறியலாம் எனினும், உலகு பற்றிய போக்கினை வடிவமைக்க உதவிய இந்நோக்கு, இஸ்லாமிய மூலங்கள் பற்றிய வியாக்கியானங்களிலிருந்து வேறுபடுவதும் அறியத்தக்கது. மேற்குலகு அறிவொளிக் காலத்தை நவீனத்துவத்திற்கான கட்டளைக்கல்லாக நிர்ணயித்ததைப் போல இஸ்லாமிய உலகின் நவீனத்துவத்திற்கான கட்டளைக் கல் மற்றும் கூறுகள் யாவை?, பூகோளமயவாதம் மேற்கத்தேய நவீனத்துவ கருத்தியல்களை இஸ்லாமிய அரசுகள், காலனித்துவவாதம், அதிகாரத்துவ அரசாங்க முறைகள் மற்றும் முரண்பாடுகள் ஆகியவை நோக்கி முன்நகர்த்திய போது இப்போக்கு இஸ்லாமிய உலகிலும் செல்வாக்கினையும் பல வினாக்களையும் தோற்றுவித்தன (Thompson, 2003).

"மரபுவாதம்", "நவீனம்" மற்றும் "நவீனத்துவம்" போன்ற எண்ணக்கருக்களின் ஆரம்ப தோற்றத்தைப் பொறுத்த வரையில் இவை இஸ்லாத்துடனோ அல்லது இஸ்லாமிய அறிஞர்களுடனோ தொடர்புபடுத்தப்படவில்லை. எனினும், ஆரம்பகால ஐரோப்பிய நவீனத்துவத்தின் முக்கிய பண்புகளில் ஒன்றான அதன் பூகோளமயத்தன்மை காரணமாக கலாசார, சமூக மற்றும் இராணுவத் தொடர்புகளை மேற்குலகுடன் நிறுத்தாத இஸ்லாமிய உலகம் பாரிய பாதிப்புக்களையும் மாற்றங்களையும் இந்த ஐரோப்பிய உலக நவீனத்துவத்திலிருந்து முகம் கொடுத்தது. இந்தநிலையில் மேற்கத்தேய உலகம் வரலாற்று ரீதியான வியத்தகு கலாசார அறிவியல் சார்ந்த முன்னேற்ற நிலையிலிருந்த போது இஸ்லாமியவுலகம் அதற்கெதிரான வீழ்ச்சி நிலையிலிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மேற்கத்தேய நவீனத்துவம் மீதான வினாக்கள் பிரச்சினைக்குரியதாக இல்லாமல் இருந்தாலும், இது மற்றவர்களைப் பற்றி வரைவிலக்கணம் செய்யும், வரையறுக்கும் ஒரு முக்கிய கூறாகவும், விரும்பத்தக்கவை மற்றும் விரும்பத்தகாதவை பற்றி அளவிடும் கூறாகவும் முன்வைக்கப்பட்டது. இந்நோக்கு இஸ்லாமிய உலகில் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், நவீனத்துவம் மற்றும் பூகோளமயவாதம் ஆகியவற்றின் செல்வாக்கு, காரணமாக முஸ்லீம் உலகு பின்வருவனற்றுள் ஒன்றைத் தெரிவு செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டது. 'மக்கா' அல்லது 'நவீனத்துவ வாதம்' (Mecca vs. Modernization). இவையிரண்டையும் ஒரே நேரத்தில் முஸ்லிம் உலகு கொண்டிருக்க முடியாத ஒன்றாகவும் பார்க்கப்பட்டது. மறுவார்த்தைகளில் கூறின், முஸ்லீம் சமூகம் தொழிநுட்பவாதம் மற்றும் இயந்திர உலகம் ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டுமெனின் பகுத்தறிவாதத்திற்கெதிரான மரபுவாதம் கைவிடப்படல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இஸ்லாமிய உலகிற்கெதிரான நவீனத்துவம் பற்றிய இந்த வியாக்கியானத்தின் பயன்பாடு செப்டம்பர் 11 (9/11) இரட்டைக் கோபுரத்தாக்குதலுக்குப் பிற்பாடு தீவிரப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக இஸ்லாமிய அரசியல், கலாசார, சமூக, சமய நடத்தைகளை மேற்கத்தேய நவீனத்துவ அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டு கேள்விக்குட்படுத்தப்பட்டன. இதனை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் (ஜூனியர்) வார்த்தைகளில் பின்வருமாறு

கூறலாம்: 'ஒன்றில் நீங்கள் (இஸ்லாமிய உலகு/முஸ்லிம்கள்) எங்களுடன் (மேற்கத்தேய நவீன உலகுடன்) இருங்கள் அல்லது அவர்களுடன் (மரபுவாதிகள் / சமய அடிப்படைவாதிகள்) இருக்கவும்' (Bush, 2001). இந்த அழைப்புக்கு அல்லது மேற்கத்தேய நவீனத்துவத்திற்கு இஸ்லாமிய உலகு ஒருமித்த பதிலை வழங்கவில்லை. இதில் இஸ்லாமியர்களின் மற்றும் முஸ்லிம்களின் பதில் அவர்கள் சார்ந்த சிந்தனை பள்ளிகளின் செல்வாக்குக்குட்பட்டதாகவும், அவர்களின் இஸ்லாம் பற்றிய புரிதலுக்கு அமைவாகவும் இருந்ததும் அறியத்தக்கது. இந்நோக்கில் இவ்வாய்வு மேற்கத்தேய நவீன கருத்தியல்களின் பிரதிபலிப்பாகக் கருதப்படும் பின்வரும் மூன்று முக்கிய சிந்தனைப்பள்ளிகள் மீது கவனம் செலுத்துகின்றது.

1. இஸ்லாமிய நவீனத்துவ வியாக்கியானம் அல்லது இஸ்லாமிய உலகமையவாதம்: இஸ்லாம் நவீனத்துவத்தை அடையாளப்படுத்தும் மேற்கத்தேய கலாசாரம் மற்றும் பெறுமானங்களுடன் ஒத்திசைகின்றது. இதன் அடிப்படையில் இந்த ஒற்றுமையை நிருபிக்கும் புதிய இஸ்லாமிய வியாக்கியானங்கள் முன்வைக்கப்படல் வேண்டும் என இந்த சிந்தனைப்பள்ளி நம்புகின்றது.

2. மேற்கத்தேய நவீன கருத்தியல்களுக்கான பதிலாக இஸ்லாமிய புத்தாக்க முயற்சி முன்னெடுக்கப்படல் வேண்டும்: இது இஸ்லாமிய கொள்கைகளுக்கு உட்பட்ட வகையிலான இஸ்லாமிய அடிப்படைகள், அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் மீதான திரும்புதல் ஆகும். இந்த புத்தாக்கவாதம் ஏனைய சமய, கலாசார மற்றும் சமூக செல்வாக்குகளை நிராகரிக்கின்றன.

3. நவீனத்துவத்திற்கான மரபுவாதிகளின் அணுகுமுறை: நவீனத்துவ செல்வாக்குகளுக்குட்படாமல் தங்களின் இஸ்லாமிய மரபுகள் மற்றும் வழக்காறுகள் மீதான நம்பிக்கை தொடர்ந்தும் முன்னிலைப்படுத்தல் வேண்டும். விட்டுக்கொடுத்தல் விரும்பத்தகாதது. மறுவார்த்தைகளில் கூறின் சமயம் மீதான புதிய வியாக்கியானங்கள் மற்றும் புதிய உலக நோக்கு என்பன இச்சிந்தனைப்பள்ளியின் இஸ்லாம் பற்றிய விளக்கவுரையுடன் ஒத்திசைவானதல்ல.

ஆக, இவ்வாய்வு நவீனத்துவத்திற்கான பதிலாகக் கருதப்படும் இம்மூன்று சிந்தனைப் பள்ளிகளைச் சேர்ந்த சிந்தனையாளர்களின் சிந்தனைகளை, அடிப்படைகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்கின்றது: அதிலும் குறிப்பாக, செய்யித் குத்ப் (1906-1966), ஜமாலுத்தீன் அல் ஆப்கானி (1839-1897), ஷேய்க் முஹம்மது அப்து (1845-1905), செய்யித் அகமத்கான் (1817-1898), அல்லாமா முஹம்மது இக்பால் (1877-1938), பெதவுல்லாஹ் குலான் (1941), தாரிக் ரமதான் (1962). இவர்களின் சிந்தனைக் கோட்பாடுகள் மேற்கத்தேயவாத நவீனத்துவ போக்குகளுடன் ஒப்பிடப்படுகின்றன. நவீனத்துவம் மீதான இஸ்லாமிய செயற்பாட்டாளர்களின் வித்தியாசமான, வேறுபாடான பதிலாக்கங்கள் பற்றிய இந்த ஒப்பீட்டாய்வு முன்னைய ஆய்வுகளில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆய்வின் குறிக்கோள்கள்

இந்த ஆய்வு மேற்கத்தேய மற்றும் இஸ்லாமிய மெய்யியல் நோக்குகளின் அடிப்படையில் நவீனத்துவம் மற்றும் அதற்கான இஸ்லாமிய எதிர்வினைகள் மற்றும் பிரதிபலிப்புகள் பற்றிய விமர்

சனப் பகுப்பாய்வாகும். இதனை மேற்கத்தேய மற்றும் இஸ்லாமிய சிந்தனையாளர்கள் எவ்வாறு எதிர்கொண்டனர், சவாலுக்குட்படுத்தினர் என்பதை ஒப்பீட்டாராய்கின்றது. ஆயினும் குறிப்பாக, தெரிவு செய்யப்பட்ட சில மேற்கத்தேய மற்றும் இஸ்லாமிய சிந்தனையாளர்கள் மீது கவனம் செலுத்துகின்றது.

முறையியல்

ஆய்வாளரினால் விளக்கவுரை, எண்ணக்கரு, ஒப்பீட்டு மற்றும் வரலாற்று முறையியல்கள் என்பன இவ்வாய்வினை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வாளர் முதல்தர மற்றும் இரண்டாம் தர தகவல்களைப் பயன்படுத்தியுள்ள தோடு பின்வரும் மூலங்களினூடாகப் பெறப்பட்ட தகவல்களை வியாக்கியானங்களுக் குட்படுத்தியுள்ளார்: ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தள தகவல்கள்.

பகுப்பாய்வு

நவீனத்துவமானது, மரபுவாதம், கருத்தியல், மற்றும் கோட்பாட்டுவாதம் ஆகியவற்றைச் சவாலுக்குட்படுத்துகின்றது. இந்த சவால்களை எதிர்கொண்ட இஸ்லாமிய சிந்தனையாளர்கள் இஸ்லாத்தின் மீதான புதிய வியாக்கியானங்களை வேண்டி நின்றனர். இந்த நோக்கில் நவீனத்துவம் உருவாக்கிய சவால்களுக்கு இஸ்லாமிய நோக்கில் பதிலளிக்க அல்லது நவீனத்துவத்தை இஸ்லாமிய நோக்கில் எதிர்கொள்ள இஸ்லாமிய மரபுகள், கலாசாரம், மற்றும் அதன் சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் மீதான மீள் மறுமலர்ச்சியை, மீள் வியாக்கியானங்களை, மறுவாசிப்பை அல்லது மாற்றுச் சிந்தனைகளையும் வேண்டி நின்றனர். இவ்விடயத்தில் பின்வரும் வினாக்கள் துாண்டுதல்களாக அமைந்தன: முஸ்லீம்கள் விடயத்தில் நடந்த தவறுகள் யாவை? ஏன் உலகார்ந்த அறிவியல் துறைகளில் முஸ்லீம்கள் பின்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்? முன்னேற்றகரமான நவீனத்துவ போக்குகளை எதிர்கொள்ள முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டும்? இவ்வினாக்களுக்கான பதில்கள் பின்வரும் மூன்று சிந்தனைப் பள்ளிகளாக அமைந்தன அல்லது நவீனத்துத்தின் மீதான இஸ்லாமிய பிரதிபலிப்புக்களாக அமைந்தன.

## 1. இஸ்லாமிய நவீனத்துவ உலகார்ந்த அணுகுமுறை

இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்கள் மீதான மீள்வியாக்கியானங்களினூடாக பின்வருவனவற்றில் இஸ்லாமிய நவீன மறுமலர்ச்சியை (renaissance) அல்லது மாற்றங்களை (Changes) இஸ்லாமிய உலகில் ஏற்படுத்தினர்: கல்வி நிறுவனங்களில் கல்வி முறைகளில் மாற்றம், மேற்கத்தேய அரசியல் எண்ணக்கருக்களான ஜனநாயகம், ஜனநாயக ஆட்சி, மனிதவுரிமை, பெண்கள் உரிமை மற்றும் சுதந்திரம் ஆகியன மீதான அரவணைப்பு மற்றும் விஞ்ஞானம் மற்றும் உலகார்ந்த அறிவுத் துறைகளில் ஈடுபாடு. இஸ்லாமிய மூலாதாரங்கள் மீதான மீள்வியாக்கியானங்களினூடாக இஸ்லாம் மேற்கத்தேய நவீன கருத்தியல்களுடன் முரண்படவில்லை மற்றும் இவையிரண்டும் சமமானதே எனக் காட்ட முயற்சித்தல் என்பன இந்த சிந்தனைப் பள்ளியின் மையக் குறிக்கோள்களாக இருந்தன.

இஸ்லாமிய நம்பிக்கைகளை சில மேற்கத்தேய பெறுமானங்கள் மற்றும் போக்குகளான ஜனநாயகம், உரிமைகள், சிந்தனைவாதம், சிந்தனையியல், விஞ்ஞானம், சமத்துவம், மற்றும் முன்னேற்ற

வாதம் ஆகியவற்றுடன் மீள் இணைக்கும் இந்த இஸ்லாமிய நவீனத்துவ நோக்கினைப் பற்றி தவ்சீப் அகமட் பரே தனது "Islamic Modernist and Reformist Thought" என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார் 'இது இஸ்லாமிய கல்வி முறையோடு நவீன பாடங்களையும் கற்கைமுறைகளையும் இணைத்து ஒரு தொடர்ச்சியான புதிய நிறுவனங்களைத் தோற்றுவித்தது. நவீனத்துவ இஸ்லாமிய சிந்தனைகளைக் கொண்ட பத்திரிகைகள், கண்டங்களையும் தாண்டிச் சென்றன. அரச அதிகாரத்தினைச் சமூக வாழ்க்கை போன்ற நிறுவனங்களுக்குள் உள்ளடக்கிய சமூக நலன்புரி அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. மற்றும் அரச அதிகாரத்தை வரையறுக்கும் அரசியலமைப்புக்கள் தோற்றம் பெறவும் வழிவகுத்தது".

ஆக, இஸ்லாமிய நவீனத்துவம் என்பது ஐரோப்பிய நவீனத்துவத்திற்கான முஸ்லீம் அறிஞர்களின் பதிலாகும். இந்தவகையில் விஞ்ஞானமும் முன்னேற்றமும், திருத்தூத்துவ அக வெளிப்பாடும் பகுத்தறிவும் இஸ்லாத்துடன் ஒற்றுமைப்படுகின்றன. இவர்கள் கடந்த கால நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் மீள்வலியுறுத்த விரும்பியது மட்டுமல்லாமல் அவை மேற்கத்தேய நவீனத்துவ அரசியல், விஞ்ஞான, கலாசார சவால்களுக்கு முகங் கொடுக்க இஸ்லாமிய விதிகளும் கருத்துக்களும் மீள்வியாக்கியானப் படுத்தப்படுவதோடு மீள் பிரயோகிக்கப்படவும் வேண்டும் என வலியுறுத்தினர். சுருக்கமாகக் கூறின், அரபுலகிலிருந்து ஆசிய வரை முஸ்லீம்களின் வாழ்க்கையின் சகல பாகங்களிலும் செல்வாக்கு செலுத்திய மேற்கத்தேய முதலாளித்துவ, நவீனத்துவத் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க சில முஸ்லிம் அறிஞர்கள் 'இஸ்லாமிய நவீனத்துவம்' என அழைக்கப்படும் ஒரு புதிய "நுண்ணறிவுத் திட்டம்" (Intelectual project) கொண்ட பொதுவான விதிகளை எழுத ஆரம்பித்தனர் (Ahamed, *2011*).

இஸ்லாமிய சிந்தனைகளை நவீனப்படுத்துவதனூடாக மரபுரீதியான இஸ்லாமிய சமய அறிஞர்கள் சவாலுக்குட்படுத்தப்பட்டதோடு மரபுவாதிகள் மாற்றங்களுக்கு இடம் கொடுக்காமையே முஸ்லீம்கள் மற்றும் இஸ்லாமியவுலகில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான முக்கிய காரணம் என விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இந்நிலைமையானது முஸ்லீம்கள் மேற்கத்தேய நவீனத்துவப் போக்குகளுக்கு ஈடுகொடுக்கமுடியாத நிலைக்கு இட்டுச்சென்றது எனக் கருதினர். இவர்களுள் பின்வரும் சிந்தனையாளர்களை முக்கியமாகச் சுட்டிக்காட்டலாம் இந்திய முஸ்லிம்களின் சீர்திருத்தத்தில் குறிப்பிடத்தக்க திருப்பத்தை ஏற்படுத்திய சேர் செய்யித் அகமத்கான் புனித குர்ஆன் விஞ்ஞானம் மற்றும் பகுத்தறிவுடன் முரண்படவில்லை என்றும் அவற்றுடன் ஒற்றுமைப்படுகின்றது எனவும் வலியுறுத்தினார் (Esposito, *2000*).

இஸ்லாமிய நவீனத்துவத்தின் வடிவமைப்பாளர் என வர்ணிக்கப்படும் எகிப்திய மெய்யியலாளர் முஹம்மது அப்து இஸ்லாமிய சட்டமும், (ஷரிஆ) இஸ்லாமிய இறையியல் கோட்பாடும் வளைந்து கொடுக்கக்கூடியவை. மேலும் மனிதனுக்கு தரப்பட்டவைகள் பகுத்தறிவு ரீதியாக கட்டுப்படுத்தப்படக் கூடியனவாக இருப்பதோடு மனிதன் பகுத்தறிவைப் பாவிக்காமை ஒரு பாரிய பாவச்செயல் எனவும் கருதினார். மேலும் இஸ்லாம் மேற்கத்தேய நவீனத்துவம் மற்றும் முன்னேற்றச் சமூகத்திற்கு ஒரு

ஒழுக்க அடிப்படையாக இருக்கமுடியும் எனவும் வலியுறுத்தினார் (Hourani, 1983). அத்தோடு இஸ்லாமிய சட்ட சீரமைப்பும் மீள்வியாக்கியானமும் (இஜ்திஹாத்) நவீனச் சூழலை மையப்படுத்தியாக இருக்கவேண்டும் எனக் கருதியோடு, உலோகாயுதச் சட்டம், சமய மறுசீரமைப்பு மற்றும் பெண்கள் கல்வி ஆகிய வற்றையும் வலியுறுத்தினார் (Cragg, 1995,p.11). அப்துர முழுமையாக நவீனத் துவத்தை பின்பற்றுதல் பற்றி விமர்சன நிலையைக் கொண்டிருந்தாலும் சிறந்த அவசியமான விடயங்கள் முஸ்லிம்களின் வாழ்க்கையில் உள்வாங்கப்படல் வேண்டும் என்ற நோக்கினையும் கொண்டிருந்தார். இந்தவகையில் தலைமை நீதிபதியாக இருந்த சமயத்தில் உலகார்ந்த சட்டம், சமய மறுசீரமைப்பு மற்றும் பெண்கள் கல்வி ஆகியவற்றை ஊக்குவித்தார். மேலும் ஒருநாள் எகிப்து என்ற நாடு எவ்வாறு பிரெஞ்சு முழுமுதல் முடியாட்சியிலிருந்து ஒரு சுதந்திர குடிய ரசாக மாறியதோ அவ்வாறே எகிப்தும் மாறும் என எதிர்பார்த்தார். மேலும் அப்துரவும் ஜமாலுத்தீன் அல் - ஆப்கானியும் காலனித்துவ சக்திகளை அகற்றவும் முஸ்லிம் சமூக முன்னேற்றத்திற்கு உதவவும் ஐரோப்பிய அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ நிறுவனங்களையும் இஸ்லாத்துடன் இணைக்கவும் முற்பட்டனர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

ஆப்கானி மற்றும் அப்துர ஆகியோரைப் போன்று பாகிஸ்தானிய மெய்யியலாளரான முஹம்மது இக்பால் இஸ்லாத்திற்கு எதிரான விசாரணையற்ற குருட்டுத்தனமான பின்பற்றுதலை (தக்லீத்) நிராகரித்ததோடு நவீன காலத்திற்கு ஏற்றவாறு இஸ்லாம் மீள்வியாக்கியானங்களுக்கு உட்படுத்தப் படல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார். மேலும் இக்பாலின் நோக்கில் இஸ்லாமிய அரசு என்பது இன மத வேறுபாடின்றி சகலரையும் சமமாக நடத்த வேண்டும். அத்தோடு ஒரு குடியரசு என்ற வடிவில் அரசு என்ற எண்ணக்கருவையும் முன்வைத்தார் (Iqbal, 1975).

தற்கால இஸ்லாமிய சமய மெய்யியலாளரான சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் தாரிக் ரமதான் இஸ்லாமிய சட்டமான ஷரீஆ என்பது தனியே ஒரு சட்டக் கோவை எனக் கருதமுடியாது. மாறாக அது ஒரு ஒழுக்க வாழ்வுக்கான வழிகாட்டலாகும். நவீனத்துவத்தில் வலியுறுத்தப்படும் சகிப்புத்தன்மை பற்றி, இஸ்லாமிய நவீனத்துவ போக்கு பற்றிக் கூறுகையில், தற்கால மேற்கத்தேய நவீனவுலகில் விவாதிக்கப்படும் தன்னின சேர்க்கையாளர்கள் பற்றிய இஸ்லாமிய நவீனத்துவ பதில் என்பது பாவம் செய்பவர் மீது கருணைப்படு, ஆனால் பாவச்செயலை வெறு என்ற அணுகுமுறை கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்றார். மேலும் அபிப்பிராய பேதங்களை ஏற்படுத்தியுள்ள முஸ்லீம்களின் ஆடை கலாசாரத்திற்கான இஸ்லாமிய நவீனத்துவ பதில், இஸ்லாம் ஒரு கடமை என்ற வகையில் எளிமையான ஆடையை ஆண்களுக்கும் பெண்களுக்கும் வலியுறுத்துகின்றது. ஆனால் அது அவசியமானதல்ல (Ramadan, 2008).

நவீன மேற்கத்தேயத்தில் வாழும் முஸ்லீம்கள் தாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்ற மனநிலையை விடுத்து அவர்கள் வாழும் சமூக நடைமுறைகளுக்கமைய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மறுவார்த்தைகளில் கூறின், ஐரோப்பிய மற்றும் அமெரிக்கர்களைப் போன்று மேற்குலகில் வாழும் முஸ்லீம்களும் பன்மைத்துவ உப கலா

சாரங்களினூடாக அடையாளத்தைப் பங்கிடுகின்றனர். முஸ்லீம்கள் சமயத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் என்றாலும் கலாசார அடிப்படையில் பிரெஞ்சு, பிரிட்டிஸ், அமெரிக்கன், மற்றும் ஜேர்மனிய பிரஜைகள் ஆவர். மேலும் ஒரு திறந்த சமூகத்தில் மதசார்பின்மையைப் பின்பற்றுவது என்பது முஸ்லீம் விதிகளுக்கு விரோதமானதல்ல. அது அனைத்து குடிமக்களும் குறிப்பாக முஸ்லிம்களும் மற்றும் ஏனையவர்களும் ஒன்றிணைந்து வாழ்வதற்கு வழிவகுப்பதோடு சமய சுதந்திரத்திற்கும் சகிப்புத்தன்மைக்கும் அவசியமான வாய்ப்பாகவும் இருப்பதாக ரமதான் நம்புகின்றார். இந்தப் பின்னணியில் தான் பின்வரும் நவீனத்துவக் கோட்பாடுகளை முஸ்லீம்கள் பரப்ப வேண்டும் என்பது ரமதானின் வலியுறுத்தலாகும் 'நாம் ஜனநாயக நாட்டில் வாழ்கின்றோம். சட்டவாட்சியை மதிக்கின்றோம். திறந்த அரசியல் கலந்துரையாடலை மதிக்கின்றோம். அத்தோடு இது சகல முஸ்லீம்களுக்கும் தேவைப்படுகின்றது' (Ramadan, 2008).

**2.இஸ்லாமிய புத்தாக்க அணுகுமுறை**

இந்த சிந்தனைப் பிரிவினர் இஸ்லாமிய நவீனத்துவ உலகமயமாக்கல் அணுகுமுறைக்கு முரணாக, இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களுக்குத் (அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்) திரும்புதலே மேற்கத்தேய நவீனத்துவத்துவத்திற்கான பதில் என்றனர். இதனை மேற்குலகம் 'அடிப்படைவாதம்' அல்லது 'தீவிரவாதம்' என அடையாளப்படுத்துகின்றது. இப்பிரிவு ஏனைய சமய, சமூக மற்றும் கலாசார செல்வாக்குகளை நிராகரிக்கின்றது. இவர்களிடம் மேற்கத்தேய நவீனத்துவம் நிராகரிக்கப்படுகின்றது. இந்த இஸ்லாமிய புத்தாக்கவாதம் கூடுதலாக இஸ்லாமிய அரசியல் இயக்கங்களுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றது. இச்சிந்தனையின் அடிப்படை நாதம் மேற்கத்தேயமயமாக்கம் (Westernization) என்பதற்கு பதிலாக வாழ்வின் சகல அம்சங்களையும் 'இஸ்லாமியமயமாக்கம்' (Islamization) எனலாம்.

எகிப்திய இஸ்லாமிய புத்தாக்க சிந்தனையாளரான செய்யித் குத்ப் தற்கால நவீன அரசுகளை அறியாமைக் கால (jahiliyyah- Ignorant) அரசு என வர்ணித்ததோடு இவ்வகைப்பட்ட அரசுகள் இஸ்லாமிய அரசுகளாக மாற்றப்படல் வேண்டும் என்றார் (Qutb, 1990). குத்ப்பின் நோக்கில் இந்த அறியாமைக்கால நவீன அரசு தெய்வீக வழிகாட்டலை புறக்கணித்து மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்களைப் பின் பற்றுகின்றது. அத்தோடு சில இஸ்லாமிய அரசுகளையும் இப்பெயர் கொண்டு குத்ப் அழைத்தார். இதற்கான காரணம் அவ்வரசுகள் ஊழல் நிறைந்தவையாகவும் மேற்கத்தேய சார்பானவையாகவும் உள்ளன. எனவே இவ்வரசுகள் கூட மாற்றப்பட வேண்டியவையே. இது பற்றி குத்ப் பின்வருமாறு கூறுகின்றார்: 'நவீன கால வாழ்க்கை முறையினையும் ஆதாரத்தையும் நோக்கின் உலகம் அறியாமைக் காலத்துக்குள் வீழ்த்தப்பட்டுள்ளது. இந்த அறியாமை என்பது உலகில் கடவுளின் இறையாண்மைக்கு எதிரானது. இறைவனின் சிறந்த பண்புகளில் ஒன்றான இறையாண்மையை மனிதனுக்குக் குறிப்பாக சிலரை மற்ற வர்கள் மீது மாற்றீடு செய்ய முயற்சிக்கின்றது (Qutb, 1990).

மேலும், இவரின் நோக்கில் சமயத்தைப் பின்பற்றுகையில் தனிப்பட்ட மற்றும் பொதுவாழ்க்கை

ஆகியவற்றுக்கிடையில் வேறுபாடில்லை. ஆக, மேற்கத்தேய சிந்தனையான அரசும் சமயமும் வேறுபடுத்தப்படல் வேண்டும் என்ற நவீனத்துவக்கோரிக் கையுடன் முரண்படுகின்றார். இவ்வாறு வேறுபடுத்தப்படின் இறைச்சட்டம் அல்லது ஷரீஆ சட்டம்என்பது அமுல் படுத்தப்பட முடியாது. மேலும் ஒரு முஸ்லீம் பொது வாழ்க்கையில் தனது சமயத்தின் அடிப்படையில் வாழ முடியாது. இஸ்லாமிய அடிப்படையற்ற அரசின் கீழ் வாழ்வது என்பது அடிமைத் தனத்திற்கு ஒப்பானதாகும். இவ்வாறான அரசுகள் அறியாமைக்கால அரசுகள் போன்று இருப்பதனால் மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கமுடியாது (Loboda, 2004). அபுல் அஃலா மௌதூதியும் ஷெய்க் முஹம்மத் அப்தூவை போல இஸ்லாமிய அரசு என்பது இஸ்லாத்தை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்றார் (Jackson, 2013).

3. மரபுவாதிகள்

சூபிகள் மற்றும் மரபுவாத இஸ் லாமிய சமயவாதிகள் உலகார்ந்த விடயங்களில் செயற்பாட்டு தன்மைகளை அலட்சியப்படுத்துகின்றனர். மேலும் ஸ்தாபிக்கப்பட்ட கருத்தியல் சார்ந்த சட்டங்கள் பகுத்தறிவார்ந்த விசாரணை க்குட்படுத்தப்பட வேண்டியதில்லை என்கின்றனர். மறுவார்த்தைகளில் கூறின், இவ்வாறான கருத்தியலான சட்டங் களைப் பொறுத்தவரையில் அவை விசாரணைகளின்றி குருட்டுத்தனமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியவைகள். மேலும் பகுத்தறிவுவாதிகள் ஏனைய கலாசாரத் தாக்கங்களுக்குட்பட்டவர்கள் என்பதோடு தாங்கள் பின்பற்றும் மரபுரீதியான இஸ்லாம் என்பது மாற்றங்களுக்குட்பட முடியாதவை என்பதும் இவர்களின் மேற்கத்தேய நவீனத்துவத்திற்கான பதிலாகும்.

இங்கு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில், இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைகளை பொறுத்தவரையில் சகல முஸ்லிம்களும் மரபுவாதிகள் என்பதை மறுக்கமுடியாது. இது அல்குர் ஆனின் உலகளாவிய பொதுமைத்தன்மை மற்றும் அதன் வலிமைத்தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இதற்கடு த்ததாக நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், தீர்ப்புக்கள், முன்னுதாரணங்கள் ஆகியனவற்றின் பதிவுகளைக் கொண்ட ஹதீஸ் அமைகின்றது. இவ்விரண்டு மூலாதாரங்களின் அடிப்படையில் முஸ்லீம்கள் சமூக உறவுகள், சமூக நிறுவனங்கள், சமய விடயங்கள் மற்றும் ஒழுக்கவிடயங்களைப் பிரயோகிக்கின் றனர்.

நான்கு இமாம்களுடன் இஸ்லா மிய சட்டங்கள் அதன் உச்சநிலையை அடைந்துடன் இஜ்த்திஹாதின் வாசல் மூடப்பட்டுள்ளது என்றவகையில் சமூக நிறுவனங்கள் மற்றும் கல்வி முறைகள் என்பன மாற்றப்படவேண்டியதில்லை என மரபுவாதிகள் நம்புகின்றனர் (Sedgwick, 2001). சுருக்கமாகக் கூறின் மரபு வாதிகள் அல்லது அவர்களைப் பின்பற்றுபவர்கள் தான் புகழ்பெற்ற பாரம்பரியங்கள், நம்பிக்கைகள் மற்றும் தங்களின் கடந்தகால பாரம்பரிய பழக்க வழக்கங்களை மாற்றாமல் செல்வச் செழிப்பாக வைத்திருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. சமய அடிப்படை உண்மையை வெளிப்படுத்தும் சமயங்க ளில் இஸ்லாமும் ஒன்றாகும் என மரபுவாதிகள் நம்புகின்றனர் (Sedgwick, 2001). இந்நோக்கு மரபுவாதிகளுக்கும் மற்றும் புத்தாக்கவாதிகளுக்குமிடையில் முரண்பாட்டையும் மோதலையும் தோற் றுவித்துள்ளது. குறிப்பாக அண்மைக்கா

லங்களில் சமய புத்தாக்கவாதிகள் வன்முறையினூடாக மரபுவாதிகளின் சமய நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கையிலும் எதிர்ப்பு நடவடிக்கை -ளில் ஈடுபட்டுள்ளதும் அறியத்தக்கது.

பொதுவாக இப்பிரிவினர் மரபுரீதியான நடைமுறைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பவர்கள் என விமர்சிக்கப்பட்டாலும் இந்நவீன காலத்திலும் இந்த இஸ்லாமிய மரபுவாதிகள் குறிப்பாகச் சூபிகள் விஞ்ஞானம் மற்றும் இலக்கியங்களில் முக்கிய பங்களிப்பினைச் செலுத்தியுள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது. அதிலும் முக்கிய சூபிகளான ஜலாலுத்தீன் ரூமி, இப்னு அறபி, உமர் கையாம், மற்றும் அல் - கஸ்ஸாலி ஆகியோர் இஸ்லாமிய மறைஞானத்தை முக்கிய இறையியல் மற்றும் சட்டத் துறைகளுடன் இணைக்க முயன்றனர். இஸ்லாமிய நவீனத்துவ வாதிகள் மற்றும் புத்தாக்கவாதிகளை போலன்றி இப்பிரிவில் முஸ்லிம் பெண் சூபிகளின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது (Whyte & Shaheen, 2014). Eickelman, Piscatori மற்றும் Piscatori (2004) தங்களின் "Muslim Politics" என்ற நூலில் பெண் சூபிவாதிகளின் பங்களிப்புப் பற்றிக் கூறுகின்றனர். சுன்னி மற்றும் ஷியா முஸ்லிம் பிரிவுகளில் ஆண் இஸ்லாமிய சமய அறிஞர்கள் முன்னுரிமைப்படுத்த ப்பட்டாலும் சூபிகளின் வரிசையில் பெண்களும் முக்கிய பாத்திரம் வகிக்கின்றனர். இது ஏனைய இரு சிந்தனைப்பள்ளிகளிலும் காணப்படாத மேற்கத்தேய நவீனத்துவ செல்வாக்கின் அடையாளமாகும். ஈராக்கின் முக்கிய சூபி கவிஞர் ராபி அல் அடவியா உலகளாவிய விடயங்களிலிருந்து தவிர்ந்து இறைவனைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வலியுறுத்தி னாலும் பெண் அடிமைத்தன நடவடிக் கைகளை விமர்சித்திருப்பதும் குறிப்பிட த்தக்கது. மேலும் எகிப்திய சூபி அறிஞர் சாயிதா நபீசா இஸ்லாமிய சட்ட அறிஞர் ஷாபியின் இஸ்லாமிய சட்ட விடயங் களைக் கற்பித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எகிப்தில் இவரின் பெயரில் பள்ளிவாசல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சூபி மரபு நவீன காலத்தில் பல்வேறுபட்ட மொழிகளையும், கலா சாரங்களையும், மரபுகளையும் உள்ளடக்கிய மக்களைக் கட்டியெழுப்ப உதவியுள்ளது. எனினும் இம்மரபு ஏனைய சிந்தனைப் பள்ளிகளால் விமர்சிக்கப் படுகின்றன. இஸ்லாமிய புத்தாக்க இயக்கங்களில் ஒன்றான வஹ்ஹாபி வாதம் அல்குர்ஆனிய மூல சொல் விளக்கங்களை முன்னிலைப்படுத்தி தங்களின் இஸ்லாமிய மீள் வியாக்கியா னங்களை வலியுறுத்துவதிலிருந்து சூபி மரபு இஸ்லாமிய மூல நூல்களைத் திரிபு படுத்துவதாகக் கருதினர்.

நவீன காலத்தில் தங்களின் சமய செயற்பாடுகள் மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களைத் தவிர்க்க நவசூபிவா திகள் முந்திய இஸ்லாமிய மூலாதாரங் களுக்கு ஏற்ப இஸ்லாமியச் சட்டம் மீள்நிறுவனப்படுத்தப்படல் வேண்டும் என வலியுறுத்துகின்றனர். இவ்வகையில் சமூக செயற்பாடுகளில் கூடிய ஈடுபட் டுடனான சூபிசத்தை மக்களிடையே பரப்புதல் மற்றும் நபிகளாரின் வாழ்க்கை மரபுகளை மீள்வலியுறுத்தல் ஆகிய வற்றில் புதிய ஆர்வங்களை வெளிப்படுத்தல் என்பன இந்நவ சூபிமரபுவாதிகள் நவீனத்துவ செல்வாக்கு மற்றும் ஏனைய இஸ்லாமியவாதிகளின் விமர்சனங்களை எதிர்கொள்ள முன்வை க்கும் மாற்றங்களாகும் (Howell, 2017). இந்தவகையில் நவசூபிவாதிகள் சமூக

செயற்பாடுகளில் ஈடுபடல் மற்றும் சூபி நிறுவன செயற்பாடுகளில் வலியுறுத்திய மாற்றம், பாரிய அணுகுமுறை மற்றும் மீள்விரிவாக்கம் என்பன உலகார்ந்த விடயங்களிலிருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தல் போன்ற முந்திய சூபி மரபுகளிலிருந்தும் அந்நியமாகியிருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இஸ்லாமிய நவீனத்துவவாதிகள் மற்றும் புத்தாக்கவாதிகளிலிருந்து நவ சூபி மரபுகளையும் சிந்தனை மரபுகளையும் பாதுகாக்க மேற்கூறிய இரண்டு சிந்தனைப்பள்ளிகளின் தாக்கங்களுக்கு எதிராகவும் அதிலும் குறிப்பாக வஹ்ஹாபிவாதங்களை விமர்சிப்பதோடு, நவீனத்துவம் தோற்றுவித்துள்ள தற்காலச் சூழல் மற்றும் ஏனைய உலகார்ந்த பிரச்சினைகளுக்குப் பிரபஞ்சம் பற்றிய பௌதீகவதீத மற்றும் ஆத்மீக புரிந்துணர்வினூடாகவே தீர்வு காண முடியும் என நவசூபிவாதிகளான ஈரானிய சிந்தனையாளர் செய்யித் ஹீசைன் நசர் மற்றும் எகிப்திய அமெரிக்க சிந்தனை -யாளர் காலித் அபு அல் பதி வலியுறுத்து -கின்றனர். இந்தவகையில் இந்நவீனமரபு நவீனத்துவ சவால்களுக்கு ஈடுகொடுத்து தற்காலத்தில் இந்தோனேசிய, துருக்கி, மற்றும் ஈரான் போன்ற நாடுகளிலும் பரவியுள்ளது. இந்தோனேசியா நாட்டில் சூபிகளின் எழுச்சி பற்றி ஆராய்ந்த Howell இதன் தற்கால நிலைபற்றி பின்வருமாறு கூறுகின்றார்: 'இப்போக்கு இன்று உயிர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மேற்கூறிய நாடுகளில் முன்னேற்றகரமாகவுள்ளது. நகரங்களில் நன்றாகக் கல்வி கற்ற மக்களிடையேயும் இக்கால நவீன போக்கிலும் முன்னேற்றகரமாகவுள்ளது' (Howell, 2017). மேலும் தற்காலத்தில் துருக்கியில் புகழ்பெற்ற குலாம் இயக்க அங்கத்தவர்களிடையேயும் சூபி வரிசை குறிப்பாகத் துருக்கி சூபி அறிஞர் நூர்சியின் மேற்கூறிய நவீன சூபி சிந்தனை கடைப்பிடிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இந்த உலகயய மற்றும் நுகர்வுவாதத்தைமையப்படுத்திய நவீனத்துவப் போக்கில் சமூக உலக பிரச்சினைகளுடன் ஈடுபாடு கொண்ட சூபித்துவத்தின் இந்த தற்கால முழுமைத்துவ அணுகுமுறை மேற்கத் தேய நவீன போக்குகளுடன் ஈடு கொடுத்து வளர்கின்றது.

## 4.நவீனத்துவம் மீதான மேற்கத்தேய மெய்யியலாளர்களின் விமர்சனம்

இஸ்லாமிய சிந்தனையாளர்கள் வேறுபட்ட நோக்கில் மேற்கத்தேய நவீன தாக்கத்தை அணுகியபோது மேற்கத்தேய உலகில் சமய அடக்குமுறை மற்றும் விசாரணையற்ற வாழ்க்கை முறை ஆகியவற்றிலிருந்து விடுவித்து சகல அறிவியல் துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்திய போக்காகவும் ஒரு சுதந்திர சமத்துவ மனிதநலவாத போக்குகளை வலியுறுத்தும் ஒன்றாகவும் நவீனத்துவம் தோற்றம் பெற்றாலும் தான் வழங்கிய வாக்குறுதிகளை மீறி முரண்பாடுகளையும் உலக யுத்தங்களையும் சுரண்டுதல்களையும் பொருளாதார சமத்துவமின்மையையும் ஆயுத உற்பத்தி போட்டியையும் ஊக்குவிக்கும் போக்காகவும் மேற்கத்தேய சில மெய்யியலாளர்களால் இது அவதானிக்கப்படுகின்றது.

கார்ல் மார்க்ஸ் மற்றும் நீட்சே நவீனத்துவத்தை விமர்சன நோக்கில் அவதானித்தனர். நீட்சே நவீன சமுகத்தின் பெறுமானங்களும் நிறுவனங்களும் உடலியல் சார்ந்த சக்திகளையும் மனித படைப்பாற்றலையும் அடக்குகின்றது என வலியுறுத்தினார். தனது On the Genealogy of Morals (1996) நூலில் மனித சுதந்திர விடு தலையில் ஒழுக்கவியலின் பெறுமானம்

பற்றி கலந்துரையாடுகின்றார். மேலும் நீட்சேயின் சூனியவாத எண்ணக் கரு நவீன மனிதனின் புதிய ஆரம்பமாகும். நவீனத்துவத்தை அளவு கடந்த அன்பாக, அர்த்தமற்ற ஒன்றாக விமர்சிக்கின்றார்.

நவீனத்துவ விருத்தியில் முதலாளித்துவம் பாரிய செல்வாக்குச் செலுத்தினாலும், நுகர்வுவாதம் சார்ந்த நவீனத்துவ போக்கு என்பது மனித சாரத்தை அந்நியமாக்குகின்றது என மேற்கத்தேய நவீனத்துவத்தை விமர்சனக் கோட்பாடு விமர்சிக்கின்றது. மேக்ஸ் ஹொக்ஹைமர் மற்றும் தியோடர் அடர்னோ தங்களின் Dialectic of Enlightenment (2002) நூலில் நவீனத்துவத்தின் இரட்டைத்தன்மையைப் பின்வருமாறு விமர்சிக்கின்றனர்.

'அச்சவுணர்விலிருந்து விடுபட்டு சுதந்திர உணர்வை வழங்கிய தொன்றாகவும் இறைமையை ஸ்தாபிக்கும் ஒன்றாகவும் அறிவொளிக்காலம் அடையாளப்படுத்தப்பட்டாலும் இன்னமும் அறிவொளிக்காலம் பேரழிவை வெற்றிகரமாக முன்னெடுக்கின்றது. மாயைகள் கலைக்கப்படுதல் மற்றும் ஆடம்பரங்களின் இடத்திற்கு அறிவினை மாற்றீடுதல் ஆகியவற்றை பொறுத்தவரையில் அறிவொளிக்காலத் திட்டம் என்பது உலகின் ஏமாற்றமாகும்' (Adorno & Horkheimer, 2002).

அலஸ்டர் மக்கைன்டர் தனது After Virtue (1984) நூலில் நவீனத்துவம் அளித்த வாக்குகளைக் காப்பாற்றத் தவறிவிட்டது. இந்த ஏமாற்றம் நவீனத்துவ சமூகத்தில் ஒரு குழப்ப நிலையை ஒழுக்கப் பெறுமானங்களில் ஏற்படுத்தியுள்ளது எனக் குறிப்பிடுகின்றார் (MacIntyre, 1984). இந்த குழப்பநிலைக்கான தீர்வு என்பது தனிநபர்வாதம் என்பதற்குப் பதிலாக நற்பண்பு, ஒழுக்கவியல் மற்றும் சமுதாயவாதம் சார்ந்தாக இருக்க வேண்டும் எனக் கருதுகின்றார். சுருக்கமாகக் கூறின், மேலைத்தேய மெய்யியலாளர்களின் நவீனத்துவம் மீதான விமர்சனம் என்பது ஒரு முழுமையான ஆத்மீக ரீதியான (Holystic and Spiritual) அணுகுமுறையை நவீனத்துவத்திற்கு வலியுறுத்துகின்றனர். இது நவீனத்துவம் மீதான இஸ்லாமிய நவீனத்துவ புத்தாக்க மறுமலர்ச்சி அணுகுமுறையுடன் ஒற்றுமைப்படுகின்றது. இஸ்லாமிய நவீனத்துவவாதிகள் தனிப்பட்ட மற்றும் பொதுவாழ்வில் வேறுபாட்டினை வலியுறுத்தியதோடு சமயம் அரசிலிருந்து வேறுபட்டிருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்நோக்கு நீட்சேயின் நவீனத்துவம் மீதான விமர்சனச் சிந்தனையுடன் ஒற்றுமைப்படுகின்றது. மேலும் அவர்கள் உலகார்ந்த அரசுகளை வலியுறுத்தினர். இது இந்தோனேசியா, அல்பேனியா, அசர்பைஜான், சாட் ஆகிய முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட சில நாடுகளில் சாத்தியமாகியுள்ளன. இந்த அணுகுமுறை இஸ்லாம் என்பது வாழ்வின் முழுமையையும் சார்ந்தது என்ற நோக்கினை விமர்சிக்கின்றது. இது அரசு பற்றிய நவீனத்துவ அணுகுமுறையுடன் தொடர்புபடுகின்றது.

முடிவுரை

மேற்கத்தேய நவீனத்துவக் கருத்தாக்கங்களை எதிர்கொண்ட முஸ்லீம்கள் தங்களின் சமயத்தை மற்றும் சமய வாழ்க்கையை எவ்வாறு அணுகவேண்டும் என்ற விடயத்தில் மீள்சிந்தனைக்குட்படுத்தப்பட்டனர். இந்தவகையில் நவீனத்துவத்தை எதிர்கொள்ள இஸ்லாமிய வாழ்க்கை முறையில் மற்றும் சிந்தனைகளில் மாற்றங்கள் அவசியமானதாகக் கருதப்பட்டன. இது மூன்று இஸ்லாமிய சிந்தனைச் செயற்பாட்டுப் பள்ளிகளின்

தோற்றங்களுக்கு வழிவிட்டது. இம் மூன்று பள்ளிகளும் நவீனத்துவத்திற்கான இஸ்லாமிய அணுகுமுறை சார்ந்த பதில்களாக அமைந்தன. இந்த மூன்று பள்ளிகளும் நவீனத்துவத்தின் பதில்களாக இருந்தாலும் இவற்றுக்கிடையில் முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது. இந்த நூற்றாண்டில், குறிப்பாக, முஸ்லீம் நவீனத்துவ வாதிகளும் புத்தாக்கவாதிகளும் இஸ்லாமிய சீர்திருத்தம் பற்றி பின்வரும் இரு சவால்களை எதிர்கொண்டனர் என்பது மேற்கூறிய அவர்களின் சிந்தனைகளிலிருந்து தெளிவு:

*1. பெரும்பான்மை முஸ்லீம்கள் ஜனநாயக மயமாக்கலுக்கு ஆதரவு மற்றும் ஷரிஆவே சட்டத்தின் மூலமாகும்.*

*2. மரபுரீதியான இஸ்லாமிய சட்டங்களின் அதிகாரம், அதன் மையத்தன்மை மற்றும் இஸ்லாமிய சமய அறிஞர்களின் மைய இடம் ஆகியன பற்றிய விவாதங்கள்.*

உலகை மையப்படுத்திய சில நவீனத்துவ சீர்திருத்தவாதிகள் சமயத் திற்கும் அரசுக்குமிடையிலான தொடர்பினை நிராகரித்தனர் அல்லது நிராகரிக்க விரும்பினர். ஏனெனில் ஒரு முஸ்லீம் நாடு உலகை மையப்படுத்திய நவீனத்துவ அரசாக இருக்கமுடியும் என்பது அவர்களின் சிந்தனைகளிலிருந்து தெளிவு. இது மேலைத்தேய நவீனத் துவத்துடன் ஒற்றுமைப்படுகின்றது. அதேவேளை அப்தா போன்ற சில இஸ்லாமிய புத்தாக்க வாதிகள் மேற்கத்தேய நவீனத்துவத்தின் சில ஜனநாயக கருத்தாக்கங்களையும் நிறுவனங்களையும் விரும்பினாலும் முற்றுமுழுதான மேற்கத்தேய நவீன அரசையோ அல்லது முழுமையான இறையியல் சார்ந்த அரசையோ விரும்பவில்லை. இரண்டையும் கலந்த ஒரு கலப்பு அரசினை (Hybrid State) அல்லது இரண்டும் கலந்த ஒரு சமய வாழ்க்கை முறையை (Hybrid Religious Life) நடைமுறை சாத்தியம் என்பது அவர்களின் சிந்தனைகளிலிருந்து தெளிவாகின்றது. இந்நோக்கில் மரபுவாதிகள் மற்றும் அடிப்படைவாதிகளிலிருந்து மாறுபட்டவர்களான புகழ்பெற்ற இஸ்லாமிய நவீனத்துவவாதிகள், சீர்திருத்தவாதிகள் மற்றும் இஸ்லாமிய சமூக இயக்கங்கள் போன்றன மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட வகையில் இஸ்லாத்தை மீள்சிந்தனைக்கு உட்படுத்தினர். முஸ்லீம் சிந்தனையில் ஏற்பட்ட இந்த மாற்றத்தினை ஓர் கட்டளைப் படிமம் (Paradigm) என அடையாளப்படுத்தலாம். இவ்விடயத்தில் சட்டரீதியான விளக்கவுரைகளுக்கும் மக்களின் பிரபல்யமான ஆதரவுக்கும் (Popular Support) முக்கியத்துவம் கொடுத்தனர். இவ்விடயமும் மேலைத்தேய நவீனத்துவத்துடன் ஒற்றுமைப்படுகின்றது.

இந்தவகையில் இஸ்லாமிய நவீனத்துவவாதிகளை அவர்களின் சிந்தனைகளின் அடிப்படையில் இஸ்லாமிய தாராளவாதிகள் (Islamic literalist) அல்லது இஸ்லாமிய பயன்பாட்டுவாதிகள் (Islamic Utilitarians) என்ற பெயர்களைக் கொண்டும் அழைக்க இடமுண்டு. ஏனெனில் இச்சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தோர் இஸ்லாத்தை நவீன கால மாற்றங்களுக்கு ஏற்ப தாராளமயப்படுத்த முயற்சித்ததோடு பெரும்பான்மை முஸ்லீம்களின் பொதுநலன்களையும் முன்னிலைப் படுத்தினர்.

இந்நோக்குகளின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் மேற்கத்தேய நவீனத்துவ கூறுகளுக்கும்

இஸ்லாமிய நவீனத்துவக் கூறுகளுக்கு மிடையில் ஒற்றுமை காணப்படுகின்றது. மேற்கத்தேய நவீனத்துவம் பின்வருவன வற்றில் மாற்றங்களை மேலைத்தேயத்தில் தோற்றுவித்துள்ளன: நகரமயமாக்கம், கைத்தொழில் மயமாக்கம், பௌதீக விருத்தி, மதச்சார்பின்மை, சிந்தனைமை யம். இவற்றில் நகரமயமாக்கம், சிந்தனைமையம், பௌதீகவிருத்தி என்பவற்றை இஸ்லாமிய நவீனத்துவக் கூறுகளில் காணலாம். மேலும் மேலைத்தேய நவீனத்துவத்தின் அரசியல் கூறுகளாக அதிகாரத்துவ அரசின் மீதான சிந்தனை, மதச்சார்பற்ற அரசு, ஜனநாயகம், சமத்துவம், மனிதவுரிமை, தகவல் பரிமாற்றம். இக்கூறுகளில் அதிகாரத்துவ அரசு, மதச்சார்பற்ற அரசு, ஜனநாயகம், சமத்துவம், தகவல் பரிமாற்றம் என்பன இஸ்லாமிய நவீனத்துவ அரசியல் சிந்தனைகளுடன் தொடர்புபடுகின்றது. மேலைத்தேய நவீனத்துவத்தின் பொருளாதாரக் கூறுகளாக பாரிய உற்பத்தி, பாரிய நுகர்வு, ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை மற்றும் முதலாளித்துவம் ஆகியவற்றில் பாரிய நுகர்வு, ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை மற்றும் முதலாளித்துவம் என்பன இஸ்லாமிய நவீனத்துவ பொருளாதாரக் கூறுகளுடன் ஒற்றுமைப்படுகின்றது. மேலும் மேலைத் தேயத்திலும் இஸ்லாமிய நவீனத்துவத்திலும் கலாசாரக் கூறுகளாக பின்வருவன பொதுவாகக் காணப்படுகின்றன: மதச்சார்பின்மை, நுகர்வுவாதம், ஊடகங்களின் முக்கியத்துவம்.

ஆக, இரு கலாசாரங்களிலும் காணப்படும் இந்த ஒற்றுமைத்தன்மை, பொதுத்தன்மை மற்றும் இணக்கப்பாடு இஸ்லாத்தில் நவீனத்துவத்திற்கு இடமில்லை, கால இட மாற்றங்களுக்கு ஏற்ப இஸ்லாத்தை மாற்ற முடியாது என்ற இஸ்லாமிய அடிப்படைவாதம் மற்றும் மரபுவாதிகளின் சிந்தனைகளுடன் முரண்படுவதை அறியலாம். உண்மையில் இஸ்லாம் குறிப்பிட்ட தொரு காலத்திற் கோ அல்லது இடத்திற்கோ வரையறுக் கப்பட்டதல்ல மாறாக, உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழக்கூடிய சூழற் பண்பைக் கொண்டுள்ளது. மேற்கத்தேய வாழ்வமைப்பிலும் இஸ்லாம் வாழக்கூடியது. இந்தப் பின்னணியில் மேற்கத்தேய நிலத்தை "தாருஷ் ஷஹாதா" சாட்சி பகரும் நிலம் என ரமதான் அடையாளப்படுத்துவதும் மனங்கொள்ளத்தக்கது.

மேற்கத்தேய நவீனத்துவமும் அதன் விளைவுகளும் மனித வாழ்க் கையில் சில விமர்சனங்களையும் மேலைத்தேயத்தில் தோற்றுவித்துள்ளன. நவீனத்துவ செல்வாக்கினால் அந்நிய மாக்கப்பட்ட தேசிய கலாசாரத்தையும் (National Culture) மரபுகளையும் பாதுகாத்தல் போன்ற சுலோகங்கள் இன்று ஜனரஞ்சகவாதமாக (Populism) ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தோற்றம் பெற்றுள்ளது. இந்த ஜனரஞ்சக கோசங்கள் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியின் வெற்றிக்கும் பிரிட்டனின் ஐரோப்பிய யூனியனின் வெளியேற்றத்திற்கும் வழிவிட்டது. இவ்வாறே இஸ்லாமிய மூலமரபு களையும் புனித நூல்களையும் மட்டுமே பின்பற்றுதல் அல்லது இஸ்லாமிய மூலாதாரங்களுக்குத் திரும்புதல் (Return to Fundamental Resource) என்ற கோசம் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும் வழிவிட்டது. மேலும் நவீனத்துவ கருத்தியல்கள் முஸ்லீம்களை ஒரு மூடிய சமூகமாக கால மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத ஒன்றாக காட்டினாலும் மேற்கத்தேய ஜனரஞ்சகவாத கோசங்களும் மேற்கத்தேய சமூகமும் ஒரு மூடிய சமூகம்

என்பதை வெளிக்காட்டுகின்றன என்பது மறுக்கப்படமுடியாதது. இந்தவகையில் நவீனத்துவத்தின் பிரதிபலிப்பான மேற்கத்தேய ஜனரஞ்சகவாதம் இஸ்லாமிய அடிப்படைவாதம் அல்லது மரபுவாதத்துடன் ஒற்றுமைப்படுவதைக் காணலாம். இந்த இரண்டு போக்குகளும் சமத்துவம், நீதி, சகிப்புத்தன்மை ஆகியவற்றைக் கேள்விக்குட்படுத்தியுள்ளன. அத்தோடு தற்கால அரசாங்கங்கள் வேலையில்லாப் பிரச்சினை, வன்முறை, பாரபட்சம் போன்ற சமூக, பொருளாதார பிரச்சினைகளை சமய மற்றும் கலாசார பண்புகளாக மையப்படுத்துகின்றன. மேற்கத்தேய அரசுகள் இப்பிரச்சினைகளை சமய, கலாசாரமாக மையப்படுத்தப்படுகின்றபோது இவை இஸ்லாமிய மரபுவாதிகளின் மற்றும் அடிப்படைவாதிகளின் கோசங்களுடன் ஒற்றுமைப்படுகின்றன.

அடிப்படைவாதிகள் மற்றும் மரபுவாதிகளின் மேற்கத்தேய நவீனத்துவத்துக்கான அணுகுமுறை இஸ்லாத்தை கருத்தியல் மையமாக்குவதாகும் (Idolization of Religion). இந்நோக்கில் சமயத்தை ஒரு கருத்தியலாக (Ideal Approach) அணுகும் போது சமயம் ஒரு நெகிழ்வற்றதாகின்றது. இதுவே அடிப்படைவாதிகள், மரபுவாதிகள் மற்றும் கடும்போக்காளர்களின் நோக்காகும். ஆனால் சமயம் கால மாற்றங்களுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கவேண்டும் எனின் இது கருத்தியலுக்கு அப்பால் அணுகப்படல் வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

இறுதியாக, இஸ்லாமிய மதச்சார்பற்ற சிந்தனையாளர், அப்துல் கரிம் சோரஷின் சமயத்திற்கும் சமய அறிவுக்கும் இடையில் வேறுபாடு இருக்கவேண்டும் என்றும் சமயம் நிலையானதும் மாற்றமடையாததும் ஆனால் சமய அறிவுச் சார்பானதும் (Relative) கால நேரங்களுக் குட்பட்டதுமாகும் என்ற கருத்து நவீனத்துவத்தில் சமயத்திற்கான அணுகுமுறையை காட்டுகின்றது (Fletcher, 2005). இக்கருத்தினடிப்படையில் இஸ்லாத்திற்கான அணுகுமுறையில் முஸ்லீம்களிடம் மாற்றங்கள், சீர்திருத்தங்கள் தேவையாகும். மாறாக, இஸ்லாத்தில் அல்ல என்பதைப் புரிய வேண்டும். மறுவார்த்தைகளில் கூறின், முஸ்லீம் மனங்களின் இஸ்லாம் பற்றிய விளக்கவுரைகளில் மாற்றம், புதிய பார்வை மற்றும் சீர்திருத்தம் தேவைப்படுகின்றது. ஆனால் இஸ்லாத்தின் மூலாதாரங்களில் அல்ல என்பதே இஸ்லாம் மற்றும் முஸ்லீம்கள் பற்றி தற்காலத்தில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் விமர்சனங்களுக்கான தீர்வாகும்.

## References

Adorno, T.W., and Horkheimer, M. (2002) *Dialectic of Enlightenment*. Trans. Edmund Jephcott, Stanford: Stanford University Press.

Ahamed Parrey, Tauseef. (2011) *Islamic Modernist and Reformist Thought: A Study of the Contribution of Sir Sayyid and Muhammad Iqbal, World Journal of Islamic History and Civilization,* 1(2), 79-93

Berman, Marshall. (1988) *All That Is Solid Melts Into Air: The Experience of Modernity*. Second ed. London: Penguin.

Bush,G.W. (2001) *Text of George Bush's speech*, the Guardian, 24 July 2016, https://www.theguardian.com

Cragg, K. (1995) Muhammed Abduh in Esposito, *The Oxford Encyclopedia of the Modern Islamic World,* 1, 11-12

Dale F. Eickelman, James Piscatori, James P. Piscatori. (2004) *Muslim Political*, Princeton: Princeton University Press.

Eickelman, D. F. (2000) Islam and the Languaee of Modernitv. *Daedalus: The Journal of the American Academy of Arts and Sciences,* 129 (1), 119-135

Esposito, John, L. (2000) Contemporary Islam: Reformation and Revolution. In John L.Esposito, (ed.), *The Oxford History of Islam (*pp.643-690), Oxford: University Press.

Fletcher, Charles. (2005) *The Methodology of Abdolkarim Soroush: A Preliminary Study,Islamic Studies*, 44 (4), 527-552

Gaonkar, D. P. (1999) *On Alternative Modernities,Public Culture*, 11 (1), 1-18, DOI: 10. 1215/08992363-11-1-1

Hourani, Albert. (1983) *Arabic Thought in the Liberal Age. 1798 -1939*. Cambridge: Cambridge University Press.

Howell, Julia. (2017) *Sufism in the Modern world*, oxford Islamic studies online, 20 July 2017. http://www.oxfordislamicstudies.com.

Iqbal, Muhammed. (1975) *The Reconstruction of Religious Thoughts in Islam.* Lahore: Munib and Wahib

Jackson, Sherman, A. (2013) Islamic Reform between Islamic Law and the Nation state, In: John Esposito and Emad El-Din Shahin, eds., *The Oxford Handbook of Islam and Politics (*pp.42-55), Oxford: university press.

Lerner, D. *(1958) The Passine of Traditional Society: Modernizine The Middle East.* Cambridge: The Free Press of Glencoe.

Loboda, L. (2004) *The Thoughts of Sayyid Qutb.* Ashbook organization, 20 September 2016, http://ashbrook.org

MacIntyre, A. (1984) *After Virtue: A Study in Moral Theory.* Notre Dame: University Press.

Nietzsche, F. (1996) *On the Genealogy of Morals,* Trans. Douglas Smith, Oxford University press

Qutb, S. (1990 ) *Milestones*. Indianapolis: American Trust Publication.

Ramadan, Tariq. (2008) *Europe's Islam Question*, the Guardian, 15 Dec 2016, https://www.theguardian.com

.................... (2007) *Muslim Minorities in Western Europe*, Lecture at Georgetown University via satellite, Gaston Hall, 11 April

Sedgwick, Mark. (2001) *Against Modernity Western Traditionalism and Islam,* News Letter, 7. No.1;11

Suresh, M.J. (2004) *Pin NaveenaththuvamEnral Enna,* PuduPunal, Chennai.

Thompson, Michael. (2003) *Islam and the West Critical Perspectives on Modernity*, Oxford: Rowman and Littlefield Publishers.

Whyte, Shaheen. (2014) *Confronting Modernity: Why the Revival of Islamic Matters*, ABC, Religion and Ethics, 05 December 2016 ,http://www.abc.net.au